செய்யாறில் நடைபெற்ற திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் சட்டப் பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், த.வேணுகோபால், ஆர். ராஜேந்திரன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அம்பேத்குமார், ஒ. ஜோதி, பெ.சு.தி.சரவணன் மற்றும் கே.ஆர்.சீத்தாபதி, ஆர்.சிவானந்தம், பொன்.முத்து, வ.அன்பழகன், கே.வி.ராஜ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், ஆர். வேல்முருகன், என்.பாண்டுரங்கன், க.லோகநாதன், டி.ஏ.தட்சணாமூர்த்தி, ப்ரியா விஜயரங்கன், ஜெயராணிரவி, விஜயலட்சுமிரமேஷ், பார்வதி சீனுவாசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

ஜூன் 3-ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும்!

மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிக்கை!

நாகை, மே.30 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது-

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை போட் டியிட்டு 13 முறையும் வெற் றிப் பெற்று 19 ஆண்டு காலம் 5 முறை தமிழக முதல்வர், சட்ட மன்றத்தில் 50 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி சாதனை நாய கர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுகாலம் கழகத் தலை வர், பல இந்திய குடியரசு தலைவர்கள், பிரதமர்களை தேர்ந்து எடுத்து, இந்திய துணை கண்டத்திற்கே வழி காட்டியாக, 60 ஆண்டுகா லம் திரைப்படத்துறை, பத் திரிக்கை துறை, , இலக்கியம் , நாடகம், சொற்பொழிவு என தொட்ட அனைத்து துறைகளிலும் சிகரமாக உயர்ந்து நின்ற 80 ஆண்டு காலம் பொதுவாழ்க்கைக்கு சொந்தக்காரர், ஒரு நூற் றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் முதன் மையாளராக விளங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சி காலத்தில் இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் ஆட்சி செய்த கலைஞர் அவர்கள் தமிழ் மொழியை செம்மொழியாக்கி, காவிரி நடுவர் மன்றம் அமைத்தும், தனியார் பேருந்துகளை அர சுடமையாக்கி அரசு போக் குவரத்து கழகத்தை உரு வாக்கியவர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், குடி நீர் வடிகால் வாரியம், பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லம், கை ரிஷா ஒழிப்பு, ஒதுக்கப்பட்டவர்கள், ஏழை எளியவர்களுக்கு இல வச கான்கிரீட் வீடுகள், 12ம் வகுப்பு வரை இலவச கல்வி உருவாக்கியது, குடும்பத்தில் முதல் பட்டதாரிக்கு கல்வி செலவை அரசே ஏற்கும், தமிழ்நாட்டில் முதன் முத லில் விவசாய கல்லூரி கோவையில் தொடங்கி யது, மீனவர்களுக்கு இல வச வீடு வழங்கும் திட்டம், சொத்தில் பெண்களுக்கு சம உரிமை, ஏழை பெண்க ளுக்கு இலவச திருமண உதவி திட்டம், விவசாயி களுக்கு இலவச மின்சாரம், கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி திட்டம், மகளிர் சுய உதவி குழு அமைத்தது, அனைத்து கிராம பகுதியி லும், கான்கிரீட் சாலை அமைத்தல், மாணவர்க ளுக்கு இலவச பேருந்து, தமிழகம் முழுவதும் சமத்து வபுரம் அமைத்தது, சமச்சீர் கல்வியை கொண்டு வந்தது என எண்ணற்ற திட்டங் களை தனது ஆட்சியில் கொண்டு வந்து தமிழக மக் களின் ஏற்றத்திற்கு உழைத் திட்ட நமது நெஞ்சமெல் லாம் நிறைந்து வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை வரும் ஜூன் 3ம் தேதி (3.6.2023) முதல் ஓராண் டுக்கு கலைஞர் நூற் றாண்டு விழாவை மயிலா டுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதி யில் உள்ள அனைத்து கிளை கள், வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்பு கள் வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுதுப்பொருட் களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி யும், முதியோர், ஆதரவற் றோர் இல்லங்களில் உள்ள வர்களுக்கு உணவு, உடை வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், இரத் ததான முகாம், மருத்துவ முகாம்கள் நடத்தியும், பொதுக்கூட்டம், தெரு முனை பிரச்சார கூட்டம் ஆகியவற்றை நடத்தி சிறப் பாக கொண்டாடுவது என் றும், இந் நிகழ்ச்சியில் ஒன் றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளு மன்ற உறுப்பினர் சட்ட மன்ற உறுப்பினர்கள்,, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர் கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வா கிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர்,

மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஒன்றியக் குழு தலைவர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூ ராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர் கள், நகர் மன்ற உறுப்பினர் கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பி னர்கள், கழக மூத்த முன் னோடிகள், கழகத்தினர், கிளை, வார்டு கழக செயலா ளர்கள், நிர்வாகிகள் அனை வரும் தங்கள் பகுதியில் நடைபெறும் கலைஞர் பிறந்த நாள், நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விழாவை சிறப் பாக கொண்டாடிட வேண் டும். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் கள் தங்கள் பகுதியில் உள்ள கிளை, வார்டுக் கழகச் செய லாளருக்கு கலைஞர் பிறந்த நாள் மற்றும் நூற்றாண்டு விழா அனைத்து பகுதியி லும் சிறப்பாக கொண்டா டிட உரிய ஆலோசனை களை வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக் கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலா ளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

கொல்லிமலை அரசு மருத்துவமனையில்

புதிய இரத்த வங்கி - குடியிருப்புகள் - கட்டிடங்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

நாமக்கல், மே.30-

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், கொல்லிமலை அரசு மருத் துவமனையில் நேற்று (29.05.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.47.00 இலட் சம் மதிப்பீட்டில் புதிய இரத்த வங்கி, எர்ணாபுரம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலை யத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப் பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட் டடம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பச்சு டையாம்பட்டி புதூர் துணை சுகாதார நிலையத் தில் ரூ.20.00 இலட்சம் மதிப் பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட் டடம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பச்சு டையாம்பட்டி புதூர் துணை சுகாதார நிலைய கட்டடம், நாமகி ரிப்பேட்டை ஊராட்சி ஒன் றியத்தில் அரசு மேம்படுத் தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60.00 இலட் சம் மதிப்பீட்டில் புதிய புற நோயாளிகள் பிரிவு கட்டத் தையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் திறந்து வைத்த னர்.

இந்நிகழ்ச்சியில் பாராளு மன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் எ.கே.பி.சின்ராஜ், சேந்த மங்கலம் சட்டமன்ற உறுப் பினர் கு.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப் பினர் பெ.ராமலிங்கம் ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

இவ்விழாவில் மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர் மா.சுப் பிரமணியன் பேசியதா வது:

கொல்லிமலை வட்டார மருத்துவமனையில் புதிய இரத்த வங்கி திறந்து வைக் கின்ற நிகழ்விற்கும், நாமகி ரிப்பேட்டை ஊராட்சி ஒன் றியத்தில் அரசு மேம்படுத் தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60.00 இலட் சம் மதிப்பீட்டில் புதிய புற நோயாளிகள் பிரிவு கட்ட டம் திறந்து வைக்கின்ற நிகழ்வும், எர்ணாபுரம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத் தில் ரூ.50.00 இலட்சம் மதிப் பீட்டில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட் டடம் திறந்து வைக்கின்ற நிகழ்வும், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பச்சு டையாம்பட்டி புதூர் துணை சுகாதார நிலையத் தில் ரூ.20.00 இலட்சம் மதிப் பீட்டில் புதிய சுகாதார நிலைய கட்டடம் திறந்து வைக்கின்ற நிகழ்வும், இந்த நிகழ்ச்சியின் மூலம் இன் றைய தினம் ரூ.1.77 கோடி இலட்சம் மதிப்பீட்டில் இரத்த வங்கி மற்றும் மருத் துவத்துறைக்கு சம்மந்தப் பட்ட கட்டடங்களை திறந்து வைக்கப்பட் டுள்ளது.

கொல்லிமலை வட்டார அரசு மருத்துவமனையில் ரூ.47 இலட்சம் ரூபாய் செல வில் இரத்த வங்கி மையம் ஒன்று புதிதாக திறந்து வைக் கப்பட்டிருக்கிறது. மலைப் பகுதிகளில் இருக்கிற மக்க ளுக்கு இரத்தம் தேவைப் படுகிற சமயங்களிலும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிசேரியன் போன்ற அறுவை சிகிச்சைகளின் மூலம் குழந்தைகளை பெற் றெடுக்க நிலைகளிலும் கர்ப் பப்பை அறுவை சிகிச்சை போன்ற நிலையில் இரத்த பெருக்கு அதிகமாக ஏற்படு கிற சூழ்நிலையின் காரண மாக இரத்தம் செலுத்த வேண்டியது என்பது அவசி யமான ஒன்றாக இருக்கி றது. மலைவாழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு இன்றைய தினம் இரத்த வங்கி திறந்து வைக்கப்பட் டுள்ளது.

கொல்லிமலை பகுதியில் இருந்து சிரமப்பட்டு தரைப் பகுதிக்கு சென்று சமதள பகுதிக்கு சென்று அங்கி ருந்து இரத்தத்தை பெற்று வந்து இந்த பகுதி மக்க ளுக்கு செலுத்தும் போது அதனால் ஏற்படுகிற கால தாமதத்தினால் ஏராளமான உயிர் இழப்புகள் ஏற்படு வதை தவிர்ப்பதற்கு தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுத லனை பெற்று கடந்த நிதி நிலை அறிக்கையில் சென்னை - பெரியார் நகர், நீலகிரி மாவட்டம் - கோத் தகிரி, நாமக்கல் மாவட்டம் - கொல்லிமலை ஆகிய மூன்று பகுதிகளில் இரத்தம் வங்கி அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, மூன்று இடங்களில் ரூ 1.47 கோடி மதிப்பீட்டில் இரத் தம் வங்கி மையம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட் டுள்ள இரத்த வங்கிக்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் 350 மில்லி இரத்தம் தானமாக வழங்கியுள்ளார். மாண்பு மிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இரத்தம் தானம் வழங்குவதற்கு விழிப்பு ணர்வு ஏற்படுத்துவதோடு மற்றவர்களுக்கு முன்னுதா ரணமாக திகழ்வதற்கு எனது பாரட்டுகளை தெரி வித்துக் கொள்கிறேன்.

கொல்லிமலை அரசு மருத்துவமனை மேம்பாட் டிற்காக சுற்றுச்சுவருடன் கூடிய பிரேத பரிசோதனை கூடம் ரூ.1.46 கோடி மதிப் பீட்டில் அமைத்திடவும், மருத்துமனையில் பணிபுரி யும் செவிலியர்களுக்கான 4 குடியிருப்புகள் ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் அமைத்திடவும், மருத்துவர் களுக்கான 4 குடியிருப்புகள் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் அமைத்திடவும் நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டு நிதித்துறைக்கு கோப் புகள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. ஒப்புதல் பெற்றவு டன் பணிகள் மேற்கொள் ளப்படும். மேலும் கொல்லி மலை அரசு மருத்துவமனை யில் செவிலியர் காலி பணி யிடங்கள் நிரப்ப மாவட்ட சுகாதார பேரவை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொல்லிமலையில் மூலி கைச் செடிகள் அதிக அள வில் உள்ளது. சித்த மருந்து களை தயாரிக்கும் டாம்கோல் நிறுவனத்தின் ஒரு சிறிய அமைப்பினை கொல்லிமலையிலும் உரு வாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாமக்கல் மாவட்டத்தில் 60 படுக்கைகளுடன் கூடிய சித்த மருத்துவமனை விரை வில் தொடங்கப்படும். அத னைத் தொடர்ந்து அடுத்த ஓராண்டிற்குள் சித்த மருத் துவக் கல்லூரியும் தொடங் கப்படும். தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்க ழகம் அமைப்பதற்கு மசோதா நிறைவற்றப்பட்டு ஆளுநர் அவர்களின் ஒப்புத லுக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்க பெற்றவுடன் சென்னையில் தொடங்கப் படவுள்ளது. இப்பல்கலைக் கழகத்திற்கான ஆராய்ச்சி மையம் தேவைப்படும் பொழுது இந்த கொல்லி மலை பகுதியை பயன்படுத் திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த நிதிநிலை அறிக் கையில் 69 வது அறிவிப்பாக மலைவாழ் பகுதியில் வசிக் கும் அனைவருக்கும் இரத்த சோகை குறித்த ஹீமோகு ளோமினோபதி நோய் கண் டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். மேலும் ஹீமோகுளோமி னோபதி நோய்க்கான உயிர் காக்கும் உயர் ரக மருந்து கள் ரூ.40.00 கோடி மதிப் பீட்டில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை யானது எல்லக்கரை கிரா மத்தில் தொடங்கி வைக்கப் படவுள்ளதை பெருமையு டன் தெரிவித்துக்கொள்கி றேன் என மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித் தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவ லர் திருமதி.மு.மணிமே கலை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கு நர் மரு.அ.சண்முகக்கனி, இணை இயக்குநர் (சுகாதா ரம்) மரு.விஜயலட்சுமி, இணை இயக்குநர் (மருத்து வம்) மரு.அ.ராஜ் மோகன், துணை இயக்குநர் (சுகாதா ரப்பணிகள்) மரு.பூங்கொடி, அட்மாக்குழுத் தலைவர் திரு.செந்தில் முருகன் ஆகி யோர் உட்பட அரசுத் துறை அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம்

திருவொற்றியூர் மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன் அறிவிப்பு

சென்னை, மே 30 -

திருவொற்றியூர் மேற் குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள் தாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றி யூர் மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப் படி இன்று (30.5.2023-செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு எண் ணூர் காசி கோயில் குப்பம் சமுதாயக் கூடத்தில் பகுதி அவைத் தலைவர் என். திரு சங்கு தலைமையில் நடை பெறுகின்றது.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாநிலநிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்டப் பகுதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள் ளும்படி கேட்டுக் கொள்கி றேன்.

அதுபோது முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக் கப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செய லாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மயிலை த.வேலு - நந்தனம் கி.மதி - கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

121 'அ' வட்டத்தில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, மே 30 -

மயிலை 121 அ வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ண மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121 அ வட்டத்தில் இன்று (30.5.2023 செவ் வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு முருகேச திருமண டபத்தில் வட்ட அவைத் தலைவர் எஸ்.கணேசன் தலைமையில் பாகமுகவர் கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலா ளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு, தொகுதி பார்வையா ளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் மதி கொள்கிறோன்.

இவ்வாறு 121 அ வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ண மூர்த்தி அறிக்கை விடுத்துள் ளார்.

40 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

நா.கோதண்டன் வேண்டுகோள் !

சென்னை மே:30

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்டத்தில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, சட்ட மன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர், ஆகியோர் ஆலோ சனைபடி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழா முன்னிட்டு வட்ட நிர்வாகிகள் ஆலோ சனைக் கூட்டம் இன்று (30.5.2023 செவ்வாய்க்கி ழமை) மாலை 6.00 மணிய ளவில் வட்டகிளை கழகத் தில் நடைபெறுகிது. இதில் பகுதிச்செயலாளர் இரா. லட்சுமணன் முன்னிலை யில் ஆர்.சீமான் தலைமை வகிக்கிறார்.

எனவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவை முன் னிட்டு சிறப்பான நிகழ்ச்சி களை நடத்துவதற்கான வட்ட நிர்வாகிகள் அனைவ ரும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட் டச்செயலாளர் நா.கோதண் டன் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

தா.இளையஅருணா , ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழக செயற்குழு கூட்டம்!

பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் வேண்டுகோள் !

சென்னை மே:30

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழக செயற் குழு கூட்டம் நடைபெறுகி றது. இது குறித்து பகுதி செயலாளர் எஸ். ஜெப தாஸ் பாண்டியன் வேண்டு கோள் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட் டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழக செயற்குழு கூட் டம் இன்று (30.05.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில் எண் 7. மணலி சாலை கொருக்குப் பேட்டை சென்னை 21 என்ற முகவரியில் பகுதி அவைத் தலைவர் மாஸ் டி.வெங்கடேசன் தலைமை யில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, சட்ட மன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர், ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் பகுதி கழக நிர்வா கிகள் வட்ட செயலாளர் கள்,மாவட்ட பிரதிநிதி கள்,மாவட்ட, பகுதி அணி களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

பிளஸ் 2 மறுகூட்டல்: அறிவிப்பு!

சென்னை, மே.30-

பிளஸ் 2 பொதுத் தேர்வு விடைத்தாள் நகலினை இணையதளத்தில் பதிவிறக் கம் செய்துகொள்வது, மறு கூட்டல், மறுமதிப்பீடு செய் வது குறித்த அறிவிப்பை அரசு தேர்வுகள் இயக்கம் வெளியிட்டுள்ளது.

பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவு கடந்த மே 8ஆம் தேதி வெளியானது. இதில் தமிழ கம் முழுவதும் 94 சதவிகிதம் பேர் தேர்ச்சி பெற்றனர்.

பொதுத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்க ளின் விடைத்தாள் நகலினை நாளை(மே.30) பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தெரிவிக் கப்பட்டுள்ளது. மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக் கம் செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பதிவுசெய்து விண் ணப்பித்த பாடங்களுக்கு விடைத் தாள் நகல்களை பெறலாம் என்று தெரிவிக்கப் பட்டுள் ளது.

மறுக்கூட்டலுக்கு பாடம் ஒன்றுக்கு ரூ.205 எனவும், உயிரியல் பாடத்துக்கு மட் டும் ரூ.305 கட்டணம் செலுத்த வேண்டும் என்று அரசு தேர்வுகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

பெரம்பூர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி அமைப்பாளர் எச்.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜெ.ஜெ.எபினேசர் முன்னிலையில் கோவி.லெனின் 300 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா, எஸ்.ஆர். கமலக்கண்ணன், தமிழ்செல்வன், அ.முருகன், க.ஜெயராமன், லதா, எஸ்.டி.சேகர்வர்மா, வட்ட செயளாலர்கள் கே.வி.இராஜன், உமாபதி, கே.இ.செந்தமிழ்அரசு, ஆறுமுகம், மனோகரன், தினகரன், 34 அ வட்ட கழக நிர்வாகிகள் ஜி.ஜோசப், மணிமேகலை, சுரேஷ், ஏ.அன்சர்பாஷா, இளைஞரணி அமைப்பாளர்கள் கௌதம், சுரேஷ், உமாஜான் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நேற்று (29.05.2023) நந்தனம் ஆவின் இல்லத்தில் பால் கொள்முதல் அளவை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் இடுபொருள் சேவைகள் குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வுக்கூட்டத்தில் பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் பால் கொள்முதல் மற்றும் இடுபொருள் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.